# யூலை- 04 - செவ்வாய்

## தூய எலிசபேத்

**ஏனெனில், உமது பேரன்பு என் கண்முன் இருக்கின்றது: உமக்கு உண்மையாகவே நடந்து வருகிறேன். திபா. 26:3**

## முதல் வாசகம் : தொடக்க நூல் 19: 15 – 29

பொழுது விடியும் வேளையில் தூதர்கள் லோத்தை நோக்கி, "நீ எழுந்திரு! உன் மனைவியையும், உன் இரு புதல்வியரையும் கூட்டிக்கொண்டு போ! இல்லையேல், இந்நகரின் தண்டனைத் தீர்ப்பில் நீயும் அகப்பட்டு அழிவாய்" என்று வற்புறுத்திக் கூறினார்கள்.அவர் காலந்தாழ்த்தினார். ஆண்டவர் அவர் மீது இரக்கம் வைத்திருந்ததால், அந்த மனிதர்கள் அவரது கையையும், அவர் மனைவியின் கையையும், அவர் இரு புதல்வியர் கையையும் பிடித்துக் கொண்டுபோய் நகருக்கு வெளியேவிட்டார்கள்.அவர்களை வெளியே அழைத்து வந்தவுடன் அந்த மனிதர்கள் அவரை நோக்கி, "நீ உயிர்தப்புமாறு ஓடிப்போ! திரும்பிப் பார்க்காதே! சமவெளி எங்கேயும் தங்காதே. மலையை நோக்கித் தப்பி ஓடு இல்லையேல் அழிந்து போவாய்" என்றார்கள்.லோத்து அவர்களை நோக்கி "என் தலைவர்களே, வேண்டாம்.உங்கள் அடியானுக்கு உங்கள் பார்வையில் இரக்கம் கிடைத்துள்ளது. என் உயிரைக் காக்கும் பொருட்டு நீர் காட்டிய பேரன்பு உயர்ந்தது. ஆயினும் மலையை நோக்கித் தப்பியோட என்னால் இயலாது. ஓடினால் தீங்கு ஏற்பட்டு, நான் செத்துப்போவேன்.எனவே, நான் தப்பியோடிச் சேர்வதற்கு வசதியாக, இதோ ஒரு நகர் அருகிலுள்ளது. அது சிறியதாய் இருக்கிறது. அதற்குள் ஓடிப்போக விடுங்கள். அது சிறிய நகர் தானே? நானும் உயிர் பிழைப்பேன்" என்றார்.அதற்கு தூதர் ஒருவர், "நல்லது, அப்படியே ஆகட்டும். இக்காரியத்திலும் உனக்குக் கருணை காட்டியுள்ளேன். நீ கேட்டபடி அந்நகரை நான் அழிக்க மாட்டேன்.நீ அங்கு விரைந்தோடித் தப்பித்துக் கொள். நீ அங்குச் சென்று சேருமட்டும் என்னால் ஒன்றும் செய்ய இயலாது" என்றார். இதனால் அந்த நகருக்குச் "சோவார்" என்னும் பெயர் வழங்கிற்று.லோத்து சோவாரை அடைந்த போது கதிரவன் மண்ணுலகின் மேல் உதித்திருந்தான்.அப்பொழுது ஆண்டவர் வானத்திலிருந்து சோதோம், கொமோரா நகர்களின்மேல் கந்தகமும் நெருப்பும் பொழியச் செய்தார்.அந்நகரங்களையும் அவற்றைச் சுற்றியிருந்த சமவெளி முழுவதையும் அழித்தார். நகர்களில் வாழ்ந்த அனைவரையும், நிலத்தில் தளிர்த்தனவற்றையும் அழித்தார்.அப்பொழுது லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்தாள். உடனே உப்புத்தூணாக மாறினாள்.ஆபிரகாம் காலையில் எழுந்திருந்து, தாம் ஏற்கெனவே ஆண்டவர் திருமுன் நின்ற இடத்திற்குப் போனார். அவர் சோதோமையும் கொமோராவையும் சூழ்ந்திருந்த நிலப்பகுதியையும் நோக்கிப் பார்த்தபோது சூளையின் புகைபோல நிலப்பரப்பிலிருந்து புகை கிளம்பக் கண்டார்.கடவுள் சமவெளி நகர்களை அழித்தபோது, ஆபிரகாமை நினைவு கூர்ந்தார். எனவே லோத்து குடியிருந்த நகர்களை அழித்தபோது கடவுள் அவரைக் காப்பாற்றினார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது பேரன்பு என் கண்முன் இருக்கின்றது.

**நற்செய்தி :** மத்தேயு 8 : 23 – 27

அக்காலத்தில் இயேசு படகில் ஏறவே, அவருடைய சீடர்களும் அவரோடு ஏறினார்கள்.திடீரெனக் கடலில் பெருங்கொந்தளிப்பு ஏற்பட்டது. படகுக்குமேல் அலைகள் எழுந்தன. ஆனால் இயேசு தூங்கிக்கொண்டிருந்தார்.சீடர்கள் அவரிடம் வந்து, "ஆண்டவரே, காப்பாற்றும், சாகப் போகிறோம்" என்று சொல்லி அவரை எழுப்பினார்கள்.இயேசு அவர்களை நோக்கி, "நம்பிக்கை குன்றியவர்களே, ஏன் அஞ்சுகிறீர்கள்?" என்று கேட்டு, எழுந்து காற்றையும் கடலையும் கடிந்துகொண்டார். உடனே மிகுந்த அமைதி உண்டாயிற்று.மக்களெல்லாரும், "காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றவே! இவர் எத்தகையவரோ?" என்று வியந்தனர்.

**தியானம்:** எவ்வாறான சூழ்நிலையிலும் நாங்கள் வாழ்ந்தாலும் கூட அவரது இரக்கமும், பேரன்பும் எங்கள் கூடவே இருக்கும். மற்றவர்கள் வெறுத்து ஒதுக்கும் போது கூட இறைமகன் இயேசு தாயன்புடன் எங்களைத் தேற்றி நடத்துவார். பெற்றதாய் உன்னை மறந்தாலும் நான் என்றும் உன்னை மறவேன் என்று வேதாகமத்தில் பார்க்கின்றோம். அன்று சோதோம் நகரில் காணப்பட்ட தீச்செயல்களின் நிமித்தம் அந்நகரானது அழிக்கப்பட முயன்றபோது இறைவன் கொண்ட இரக்கத்தின் நிமித்தம் லோத்துவும் இரு புதல்வர்களும் காப்பாற்றப்பட்டனர் (தொ.நூல்.19:15). நாங்களும் லோத் எவ்வாறு இறைவனில் நமபிக்கை கொண்டவராக வாழ்ந்தாரோ அதே போன்று நாங்களும் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். இன்றைய வாசகத்திலும் இயேசு சீடர்களைப் பாாத்து கடிந்து கொள்கின்றார். அவரோடு கூட இருந்தவர்கள், அவரைப்பற்றி அறிந்தவர்கள் இயேசு தங்கள் கூட இருக்கும் பொழுது எதுவும் நடக்காது என்பதை மறந்து நம்பிக்கையிழந்து விடுகிறார்கள். ஏனெனில் கடல் கொந்தளிக்கும் பொழுது ஆண்டவரே நாங்கள் சாகப்போகின்றோம் என்று பயந்தார்கள். எனவேதான் இயேசு "நம்பிக்கை குன்றியவர்களே ஏன் அஞ்சுகிறீர்கள" (மத்.8:26)ல் இவ்வாறு கூறுகின்றார். எனவே அன்று லோத்தை காப்பாற்றிய இறைவன், சீடர்களை அச்சத்தை நீக்கிய இறைவன் எமது வாழ்க்கையில் எவ்வாறான புயல்கள் எம்மைத் தாக்கினாலும் ஆண்டவராகிய இயேசு எங்களை பாதுகாத்து வழிநடத்துவார் என்ற நம்பிக்கையுடன் வாழ்வோம்.